<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.
**அ.வ.எண்.497/2017**
<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்</u>
<u>வாக்குமூலம் – வா.சா.1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மனோகரன் | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | நாள் | : | 14.07.2025 |

1987 ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10 ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025 ஆண்டு ஜுலை 14 ம் நாள் சாட்சியம்.

---

**<u>11 முதல் 13 மற்றும் 15, 16 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. சின்னாண்டி மற்றும் கருப்பாண்டி சகோதரர்கள். சின்னாண்டியின் இளைய மகன் ராமாண்டி. சின்னாண்டிக்கு ஒரே மகன் ராமாண்டி என்றால் சரியல்ல. பழனியாண்டி என்ற இன்னொரு மகன் உள்ளார். சின்னாண்டி மகன் பழனியாண்டி என்பதற்கு வாரிசு சான்று எதுவும் கிடையாது. சின்னாண்டி மகன் பழனியாண்டி என்பதற்கு வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. பட்டா புத்தகத்தில் சி.ப.நாச்சியாண்டி என்று உள்ளது. பட்டா புத்தகத்தில் பழனியாண்டியின் தகப்பனார் பெயர் சின்னாண்டி என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பட்டா புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள பழனியாண்டிக்கும், இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள சின்னாண்டிக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

2. ராமாண்டிக்கு மாணிக்காண்டி என்று ஒரே மகன் என்றால் சரிதான். அந்த மாணிக்காண்டி இறந்து விட்டார். அவருக்கு 1,2 பிரதிவாதிகளான சபாபதி, நடராஜ் என்பவர்கள் வாரிசுகள். சபாபதி, நடராஜ் இருவரும் இறந்து விட்டார்கள். அவர்களது வாரிசுகள் தான் சாந்தி, சித்ரா ஆவார்கள்.

3. கருப்பாண்டியின் ஒரே மகன் நாச்சியாண்டி. நாச்சியாண்டி இறந்து விட்டார். அவரது ஒரே மகன் அருணாச்சலம் என்பவர். அருணாச்சலம் என்பவர் இறந்து விட்டார். அவரது வாரிசுகள் தான் 3 மற்றும் 4வது பிரதிவாதிகள் ஆவார்கள். எனக்கும், சின்னாண்டி என்பவருக்கும் எனது தகப்பனாருக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி நபர்கள் மட்டும் தான் கருப்பாண்டியின் வாரிசுகள் என்றால் சரிதான்.

4. எனது பூமியின் பட்டா எண் எனக்குத் தெரியாது. தாவா சொத்தின் பட்டா எண்.2992 என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் அந்த சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன் உள்பக்கத்தில் சர்வே எண்.1685/1 விஸ்தீரணம் 0.27.0 என்றும் பட்டா எண்.2992 என்றும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் மா.சபாபதி, மா.நடராஜ் என்று எழுதப்பட்டு அடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் சொத்தானது சபாபதி, நடராஜ் ஆகியோர்கள் பெயருக்கு பட்டா ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பழைய எண்.790ஐ ரீ சர்வே எண்.1685/1 என உட்பிரிவு செய்து மா.சபாபதி, மா.நடராஜ் ஆகியோர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவர்கள் பெயரை வா.சா.ஆ.1ல் நான் அடித்துள்ளேன் என்றால் சரியல்ல. பட்டா

வழங்கியவர்கள் எழுதி அடித்து விட்டார்கள். அவ்வாறு அழிக்கப்பட்டதற்கு எந்த குறிப்பும் ஆவணத்தில் இடம் பெறவில்லை என்றால் சரியல்ல. நான்தான் அழித்தல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ.1 மற்றும் இதர ஆவணங்களை சமர்ப்பித்து நான் வா.சா.ஆ.10 ஆன ஆவணத்தை வாங்கியுள்ளேன். வா.சா.ஆ.1 ன் அடிப்படையில் பெறப்பட்ட வா.சா.ஆ.10 ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.9 ஆவணங்களில் பட்டா எண்.2992 என்ற பட்டா எண் இடம் பெற்றுள்ள சொத்துக்களுக்கு வரி செலுத்தியதாக எந்த ஒரு குறிப்பும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணம் 2006 ல் நான் வரி செலுத்தியதற்கான ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆனது நான் தவறாக பெறப்பட்ட பட்டாவின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது என்பதால் செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ன் அசல் ஆவணம் என்னிடம் கிடையாது.

6. வா.சா.ஆ.3, 4, 5, 6 ஆகிய ஆவணங்களுக்கும் இந்த தாவா சொத்திற்கும் தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.18 ஆவணம் எங்கள் குடும்பத்திற்குள் ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் என்றால் சின்னாண்டி மகன் பழனியாண்டி, மற்றும் ராமாண்டி ஆகியோர்கள் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினைப் பத்திரமாகும். மேற்படி ஆவணத்தில் தாவா சொத்து குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.18 ஆவணத்தில் பழனியாண்டி தகப்பனார் பெயர் சின்னாண்டி என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.18 ஆவணத்தில்

உள்ளவர்களுக்கும் இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள பழனியாண்டிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு சம்மந்தம் எதுவும் இல்லாததால் தான் தாவா சொத்து அந்த ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

7. எனக்கு வழங்கப்பட்ட பட்டாவிற்கு விசாரணை எதுவும் நடைபெறவில்லை என்றால் சரிதான். எனது பெயர் பட்டாவில் சேர்க்கப்பட்டதை நீக்கக் கோரி இந்நீதிமன்றத்தில் அ.வ.319/2016 என்று அரசு அலுவலர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றிய விவரம் எனக்கு தெரியாது. அதில் நான் தரப்பினர் கிடையாது. அந்த தீர்ப்பாணது என்னை சட்டப்படி கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. அதனால் தான் நான் வருவாய் துறையினரிடம் கொடுத்த மனுக்கள் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

8. பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்ட பட்டா குறித்து நான் வருவாய் துறையில் மேல்முறையீடு செய்துள்ளேன். அந்த மேல்முறையீட்டில் எனது மனு விசாரணை செய்யப்பட்டது. அதற்கான ஆவணங்கள் எதுவும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த மேல்முறையீடு நிலுவையில் உள்ளதால் இந்த வழக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளதாக சொல்லியுள்ள ஆவணங்கள் வழக்கிற்காக என்னால் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த தாவா சொத்திற்கும் எங்கள்

குடும்பத்தினருக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. அதனால் இந்த தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடிவடைந்தது</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

/*ஒம்*/ஆர்.பாண்டி மகாராஜா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.